3. அறிவிப்புகள்

(அ) பல்கலைக்கழக மேலாண்மைக் குழுமம், ஆட்சிமன்றப் பேரவை, கல்விக் குழு ஆகியவற்றுக்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு மீன் வளப் பல்கலைக்கழக மேலாண்மைக் குழுமம், மதுரை காமராசர் பல்கலைக்கழக ஆட்சிமன்றப் பேரவை, திருவள்ளுவர் பல்கலைக்கழக கல்விக் குழு மற்றும் தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழக ஆட்சிமன்றப் பேரவை ஆகியவற்றில் பணியாற்ற தலா ஒரு சட்டமன்ற உறுப்பினரைத் தேர்ந்தெடுக்குமாறு சம்பந்தப்பட்ட பல்கலைக்கழகங்களிடமிருந்து கோரிக்கைகள் வரப்பெற்றுள்ளன.*

முற்பகல் 11—40

தமிழ்நாடு மீன் வளப் பல்கலைக்கழக மேலாண்மைக் குழுமத்திற்குத் தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினரின் பதவிக் காலம் மூன்று ஆண்டுகளாகும். (குறுக்கீடுகள்)

மதுரை காமராசர் பல்கலைக்கழக ஆட்சிமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினரின் பதவிக் காலம் 7—2—2016 வரை ஆகும். (குறுக்கீடுகள்)

திருவள்ளுவர் பல்கலைக்கழக கல்விக் குழு மற்றும் தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழக ஆட்சிமன்றப் பேரவை ஆகியவற்றிற்குத் தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினரின் பதவிக் காலம் 16—8—2014 வரை ஆகும். (குறுக்கீடுகள்)

தேர்ந்தெடுக்கப்பெற விரும்பும் வேட்பாளர்கள் தங்களின் வேட்பு மனுவினை 14—7—2014 பிற்பகல் 3—00 மணிக்குள் பேரவைச் செயலாளரிடம் சமர்ப்பிக்க வேண்டும். (குறுக்கீடுகள்) வேட்பு மனு படிவம் வேண்டுவோர் பேரவைச் செயலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். வேட்பு மனுக்கள் 15—7—2014 பிற்பகல் 3—00 மணிக்கு பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும். (குறுக்கீடுகள்)

விலகிக்கொள்ள விரும்பும் வேட்பாளர்கள் 15—7—2014 மாலை 5—00 மணிக்குள் தங்களது வேட்பு மனுவினைத் திரும்பப் பெறலாம். (குறுக்கீடுகள்)

2014 ஜூலை 11] [பேரவைத் தலைவர்]

தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர் ஏதாவதொரு காரணத்திற்காக பேரவை உறுப்பினர் பதவியை இழக்க நேரிட்டால், அந்நாளோடு பல்கலைக்கழகத்தின் அமைப்பில் அவர் வகித்து வரும் உறுப்பினர் பதவியும் முடிவடையும். (குறுக்கீடுகள்)

செல்லத்தக்க வேட்பு மனுக்களின் எண்ணிக்கை, நிரப்பப்படவேண்டிய இடங்களின் எண்ணிக்கைக்கு மேற்படுமாயின், அப்பல்கலைக்கழகங்களின் அமைப்புகளுக்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க தேர்தல் நடைபெறும். தேர்தல் நடைபெறும் நாள் பின்னர் அறிவிக்கப்படும். (குறுக்கீடுகள்)

2. வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் 10–7–2014 அன்று பயன்படுத்திய வார்த்தையை நீக்கக் கோருதல்—*தொடர்ச்சி*

திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதற்கு முன்பு அவையில் முன்னாள் முதலமைச்சர் கருணாநிதி அவர்களே "அந்த அளவுக்கு ஆளும் கட்சி தன்னடித்த மூப்பாக என்று சொல்வார்களே, கிராமத்து மொழி அதுபோல" என்று சொல்லியிருக்கிறார். ஆகவே, இதுபோன்ற வார்த்தை unparliamentary வார்த்தை அல்ல. இதற்கும் மேலே பேசுவதற்கு ஒன்றும் இல்லை. (குறுக்கீடுகள்) எனவே இதுபோன்ற முன்னுதாரணங்கள் நிறைய இருக்கின்றன. (குறுக்கீடுகள்) அதனால் இதில் ஒன்றுமில்லை.

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் சிலர் மாண்புமிகு பேரவைத் தலைவரின் இருக்கை அருகே நின்றுகொண்டு கோஷமிட்டனர்.)

நான் மற்ற அலுவல்களுக்குப் போகவேண்டும். இதுவெல்லாம் முறையல்ல. (குறுக்கீடுகள்) அது என்னுடைய உரிமை. (குறுக்கீடுகள்) அது அவைத் தலைவருடைய உரிமை. (குறுக்கீடுகள்) அதுமாதிரி இல்லை. (குறுக்கீடுகள்) நீங்கள் பேசுவது தேவையில்லையென்றால் நீக்கிவிடுவேன். (குறுக்கீடுகள்) நான் இவ்வளவு தூரம் முன்னுதாரணத்தையெல்லாம் எடுத்துச்சொல்லிவிட்டேன். ஏற்கெனவே, இதுபோன்ற முன்னுதாரணமெல்லாம் இருக்கிறது. (குறுக்கீடுகள்) அது unparliamentary வார்த்தை கிடையாது. (குறுக்கீடுகள்) இதற்கு மேலே நான் விளக்கம் சொல்வதற்கு ஒன்றுமில்லை. இதற்கு மேலே நீங்கள் என்னை வற்புறுத்தினால் நான் நடவடிக்கை